## உருகுணு பல்கலைக்கழகம் - 2013

உருகுணு பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரமான விரிவான அறிக்கை பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு 2014 யூன் 05 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உருகுணு பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பட்ட எதிர்பார்ப்புக் கல்வியின் பொருத்தப்பாட்டையும் தரத்தையும் மேம்படுத்தும் செயற்திட்டம் (IRQUE) மூலம் 2004 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்குக் கையளிக்கப்பட்ட ரூபா 162.95 மில்லியன் தொகையான சொத்துக்கள் மீளாய்வாண்டில் கணக்கு வைக்கும் போது நியமப் பெறுமதி கருத்திற்கொள்ளப்படாது கிரய அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நூலகப் புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் முற்பணங்களைத் தீர்த்தல் உரிய பிரகாரம் கணக்கு வைக்கப்படாமையின் காரணமாக நூலகப் புத்தகக் கணக்கு ரூபா 458,867 தொகையினால் குறைவாகவும் முற்பணக் கணக்கு அப்பெறுமானத்தினால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 17,338,186 பெறுமதியான ஆராய்ச்சி படகினை மூலதனமாக்குவதற்குப் பதிலாக முற்பணமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற மோட்டார் வாகனங்களின் மீதியில் 21 வாகனங்களின் நியமப் பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டிராததுடன் 21 வாகனங்களின் மொத்தப் பெறுமதியும் ரூபா 110,963 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) வேலை பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்குக் கையளிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற ரூபா 79,274,956 தொகையான 35 கட்டிட புனரமைப்பு செயற்திட்டத்தின் பெறுமதி மற்றும் ரூபா 26,555,749 தொகையான புதிய நிர்மாண செயற்திட்டத்தின் பெறுமதி கட்டிடக் கணக்கிற்கு மாற்றப்படாத காரணத்தினால் இந்த பெறுமதியின் அடிப்படையில் வருடாந்த பெறுமானத்தேய்வு சீராக்கமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாணவர்களால் பெறப்படாத ரூபா 834,900 தொகையான மாணவர் உதவித் தொகை மற்றும் மஹபொல புலமைப்பரிசில் நிதியாண்டின் இறுதியில் பொறுப்பாக காண்பிப்பதற்குப் பதிலாக உரிய செலவினங்களிலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பெறப்படாத மஹபொல கணக்கில் வரவு வைக்க வேண்டிய ரூபா 285,950 தொகை பெறப்படாத மாணவர் உதவித் தொகை கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(எ) விவசாய பீடத்திற்குரிய 2011 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட ரூபா 486,094 தொகையான மீதி 2012 இன் நிதிக்கூற்றுக்களிலும் பட்டோலைகளிலும் காண்பிக்கப்படாதிருந்த போதிலும் 2013 ஆண்டின் போது மீதியாக காண்பிக்கப்பட்டதன் மூலம் கணக்குகளின் சமப்படுத்தல் தொடர்பாக கேள்விக்குரியதாகியிருந்தது.

### 2.2.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

09 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணப்படுகின்ற மீதி மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் காணப்படுகின்ற மீதிகளுக்கிடையே ரூபா 9,233,263 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்கு விடயம் | கணக்கின் பிரகாரம் மீதி | பட்டோலையின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடு முற்பணம் | 2,817,217 | 11,674,391 | 8,857,174 |
| இறுதியிருப்பு - பொறியியல் பீடம் | 671,164 | 650,495 | 20,669 |
| - வைத்திய பீடம் | 1,971,285 | 1,962,548 | 8,737 |
| - விவசாய பீடம் | 904,822 | 899,389 | 5,433 |
| ஆராய்ச்சி முற்பணம் | 55,189 | 44,960 | 10,229 |
| பிரயாணச் செலவு முற்பணம் | 1,607,689 | 1,607,699 | 10 |
| ஆராய்ச்சிச் செலவின முற்பணம் | 177,358 | 190,000 | 12,642 |
| சர்வதேச ஆராய்ச்சி முற்பணம் | 638,680 | 397,443 | 241,237 |
| மக்கள் வங்கி தீர்வைக் கணக்கு | 22,472,899 | 22,550,031 | 77,132 |
| | | | 9,233,263 |

### 2.2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிக்கொடைப் பணம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தை விடுவிப்பதற்கு முன்னர் பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டிய ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் 07 ஊழியர்களிடமிருந்து ரூபா 377,575 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிட முடியாதிருந்தது. அவ்வாறே இதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து உரிய பணத்தை வட்டியுடன் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 சனவரி தொடக்கம் 2011 ஏப்ரல் வரையான காலப்பகுதியில் செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியின் அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பன கணிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன்

அந்தக் காலப்பகுதியில் ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் சேவையிலிருந்து விலகிய நபர்களுக்காக வாழ்க்கைச் செலவுப் படியின் அடிப்படையில் சேவை வழங்குனர் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பு பணமாக 2012 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து கிடைத்த ரூபா 3,622,864 தொகையிலிருந்து ரூபா 1,463,480 தொகை உரிய நபர்களுக்குச் செலுத்தாது நானாவித வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிதியை துரிதமாக உரிய நபர்களுக்கு செலுத்துவதற்கோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மீள அனுப்பிவைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்வேறு வெளிநாட்டுக் கொள்வனவுகளைச் செய்வதற்காக 1990 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் மூலம் செலுத்தப்பட்ட முறையே ரூபா 811,535 மற்றும் ரூபா 1,793,300 தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதற்குரிய பொருள் கிடைத்திருக்குமாயின் முறையான வகையில் முற்பணத்தைத் தீர்ப்பதற்கோ அல்லது பொருள் கிடைக்கவில்லையாயின் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து இந்தத் தொகையை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டின் போது மஹபொல மற்றும் மாணவர் உதவித் தொகை செலுத்துவதற்காக வங்கிக்கு வழங்கப்பட்ட பணத்திலிருந்து மாணவர்களினால் பணம் பெறப்படாமையின் காரணமாக எஞ்சிய ரூபா 6,531,050 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தாத மஹபொல மற்றும் மாணவர் உதவித்தொகை கணக்குகளில் சேமிக்கப்பட்டிருந்தது. அத்தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகளை கொள்வனவு செய்வதற்காக 2006 தொடக்கம் 2012 ஆம் ஆண்டுவரை செலுத்தப்பட்ட ரூபா 3,199,601 தொகையான முற்பணம் 2014 யூலை வரையும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

1982 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்குகளில் காணப்படுகின்ற ரூபா 150,000 தொகையான நிலையான வைப்புக்களுக்குரிய நிலையான வைப்புச் சான்றிதழ் அல்லது மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) (i) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 114 ஆம் பிரிவு | சம்பளத்துடன் செலுத்தப்படுகின்ற படிகளுக்கு மேலதிகமாகச் செலுத்தப்படுகின்ற ஏனைய படிகள் மற்றும் கட்டணங்களுக்காக உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது வரி அறவிடப்படாமல் ரூபா 12,516,081 தொகை படியாகச் |

| | | |
|---|---|---|
| | | செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | 2011 இன் 22 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 117(ஓ) ஆம் பிரிவு | 2013 ஆம் ஆண்டின் போது வெளிவாரி விரிவுரைக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 24,238,524 தொகையிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை
------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினர் களிடமிருந்து இப் பிரிவின் பிரகாரம், வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | XXIV ஆம் அத்தியாயத்தின் 3.18 மற்றும் 3.18(i) ஆம் பிரிவுகள் | சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிப்பதற்கு முன்னர் கடன் பணத்தை அறவிடுவதற்கும் அவ்வாறில்லையாயின் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டித் தொகையை மாதாந்தம் பெறுவதற்காக வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்
------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 104 | 2013 ஏப்ரல் 02 ஆந் திகதி திடீர் விபத்திற்குள்ளாகிய வாகனம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 387 | 2013 சனவரி தொடக்கம் திசெம்பர் வரை இரண்டு நடைமுறைக் கணக்குகளில் ரூபா 1,158,514 தொகை மேலதிகப்பற்று வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 1646 | வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்குரிய 23 வாகனங்கள் 2013 ஆம் ஆண்டிற்குரிய ஓட்ட அட்டவணை குறிப்பிட்ட பிரகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | |
|---|---|
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 437 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபம் | அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்குக் காப்புறுதி செய்யும் போது இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அல்லது தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்திடம் நேரடியாகக் காப்புறுதி செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக ஒரு வாகனத்தின் காப்புறுதி இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை முகவரின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஊ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 2.11 ஆம் பந்தி | 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 49 வாகனங்களில் 18 வாகனங்களின் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை செய்தல் 2014 யூலை 30 வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (எ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றுநிருபம் | |
| (i) 1998 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 737 ஆம் இலக்க சுற்றுநிருபம் | உடன்படிக்கையை மீறும் விரிவுரையாளர் களிடமிருந்து அறவிடப்படுகின்ற பணம், நிலையான வைப்பு/ திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக அறவிடப்பட்ட ரூபா 30,237,101 தொகை பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. |
| (ii) 2006 யூன் 06 ஆந் திகதிய 876 ஆம் இலக்க சுற்றுநிருபம் | கணனி செயற்பாட்டு உதவியாளர் III பதவிக்கு 17 பேரைச் சேர்ப்பது தொடர்பான நேர்முகப் பரீட்சையின் போது புள்ளி வழங்கும் முறையான திட்டமொன்று தயாரித்து அதற்கு கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 164,624,000 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அப்பற்றாக்குறை ரூபா 150,391,000 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 14,233,000 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. செயற்பாட்டுச் செலவின அதிகரிப்பு நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3.2 பல்கலைக்கழகத்திற்கு எதிராக அல்லது பல்கலைக்கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தினால் மேல்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஒரு வழக்கும் பல்கலைக்கழகத்திற்கு எதிராக நீதிமன்றத்தினாலும் தொழில்நியாய சபைகளினாலும் தொடுக்கப்பட்ட 17 வழக்குகளும் காணப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

விஞ்ஞான பீடம் மற்றும் மீன்பிடியும் கடற்றொழில் விஞ்ஞானமும் மற்றும் தொழில்நுட்பப் பீடங்களினதும் ஆகக் குறைந்த காலத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்யாமையின் சதவீதம் முறையே 25 சதவீதம் மற்றும் 30 சதவீதமாக இருந்தது. அதாவது ஒட்டுமொத்த பரீட்சார்த்திகளில் ¼ இற்கு அண்ணளவான அளவு ஆகக் குறைந்த காலத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ நிதியியல் பீடத்திற்காக இரண்டு நிரந்தரக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு 2013 ஏப்ரல் 26 ஆந் திகதி தனியார் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 14,000,000 தொகையில் நிர்மாண நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அது வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டு 2014 மார்ச் 11 ஆந் திகதியான கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த நிர்மாணங்களுக்குரிய மதிப்பீடு தயாரிக்கும் போது பெறப்பட்ட அளவிடை விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இதன் போது ஏற்பட்ட ரூபா 3,656,184 தொகையான சேமிப்பு பயன்படுத்தப்பட்டு ஆரம்ப மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத ரூபா 2,757,124 தொகையான மேலதிக வேலைப் பகுதி ஒப்பந்தக்காரரின் கூறுவிலையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டமையின் காரணமாக பெறக்கூடியதாக இருந்த போட்டியாளர் நலன் பல்கலைக்கழகத்தினால் இழக்கப்பட்டிருந்தது. மேலும் மின் இணைப்பிற்காக விபரமான வேலை மதிப்பீடின்றி ரூபா 1,500,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் கூறுவிலை அங்கீகாரமின்றி ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,080,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் உடன்படிக்கைகளை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடவேண்டியதாக பல்கலைக்கழகம் இனங்கண்டிருந்த மொத்தத் தொகை ரூபா 55,421,498 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 30,237,101 தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்தது. அத்திகதியில் உள்ளவாறு மேலும் நிலுவைத் தொகை ரூபா 25,184,397 ஆக இருந்ததுடன் இது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 19,189,451 கூட்டுத்தொகையான 24 கடன் மீதிகள் 5 வருடங்களைவிட பழைய கடன் மீதியாகும். இது அறவிடவேண்டிய தொகையில் 76 சதவீதமாகும்.

1994, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சேவையைக் கைவிட்டுச் சென்ற மூன்று விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய தொகையினைக் கணிப்பீடு செய்தல் 2014 மே வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெல்லமடம சுற்றாடலில் மாணவர்களுக்காக விடுதியினை வாடகைக்குப் பெறல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஆண்கள் விடுதிகளில் 274 மாணவர்களுக்கும் பம்புறண பெண்கள் விடுதியில் 25 மாணவர்களுக்கும் விடுதிவசதி வழங்கக்கூடிய இயலுமை காணப்பட்ட போது, ரூபா 600,000 தொகை செலுத்தி இரண்டு விடுதிகள் 2013 மே 15 தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. சகல பழுதுபார்த்தல்களும் பராமரிப்பு நடவடிக்கைகளும் வீட்டு உரிமையாளரினால் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அரசாங்க மதிப்பீட்டாளரினால் ஒரு விடுதியின் மாதாந்த வாடகை ரூபா 25,000 ஆகத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாது விடுதி வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. ஒரு விடுதிக்கு பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினமாக பல்கலைக்கழகத்தினால் 2014 பெப்ரவரி 07 ஆந் திகதி வரை ரூபா 77,198 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த விடுதி மாணவர்களுக்காக தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு பொருத்தமான நிலைமையில் இருக்கவில்லை. மற்றைய விடுதி அரசாங்க மதிப்பீட்டாளரின் வாடகை மதிப்பீடின்றி ரூபா 25,000 தொகையான மாதாந்த வாடகையில் பெறப்பட்டு 2013 ஒக்தோபர் வரை பயன்பாடற்றுக் காணப்பட்ட காரணத்தினால் அந்தக் காலத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 112,500 வாடகை பயனற்ற செலவினமாக இருந்தது.

(ஆ) உயர்கல்வி அமைச்சிற்குரிய ஒரு வாகனம் 2009 யூன் 11 ஆந் திகதி பல்கலைக்கழகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் அத் திகதி தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2014 மே 22 ஆந் திகதி வரை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் பல்கலைக்கழக வளவில் துருப்பிடிக்கும் நிலையில் காணப்பட்டது. இந்த வாகனத்திற்குரிய பதிவுப் புத்தகம் மற்றும் வருமான அனுமதிப்பத்திரம் என்பன கணக்காய்வுத் திகதி வரையிலும் பல்கலைக்கழகத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

(இ) முறையான சாத்தியவள ஆய்வின்றியும் காணப்படுகின்ற மாற்றுவழிகள் தொடர்பான ஆய்வின்றியும் ரூபா 17,338,186 தொகை செலவில் மீன்பிடியும் கடற்றொழில் விஞ்ஞானமும் மற்றும் தொழில்நுட்பப் பீடத்திற்காக ஆராய்ச்சிப் படகு பெறப்பட்டிருந்தது. இந்தப் படகு 2013 மார்ச் 08 ஆந் திகதி பல்கலைக்கழகத்திற்குக் கிடைத்திருந்த போதிலும் 2014 மே 20 ஆந் திகதி வரை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான காலி கடற்படைத்தளத்தில் நங்கூரமிடப்பட்டிருந்தது. எனினும் பீடத்தின் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக 2008 தொடக்கம் 2013 வரை படகை வாடகைக்குப் பெறுவதற்காக வருடத்திற்கு ரூபா 30,000 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

**4.4 வெளிப்படையான மோசடிகள்**

நிதிசார் மற்றும் சொத்து முகாமைத்துவ பலவீனங்களின் காரணமாக பின்வரும் மோசடிகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்தின் அணுவிஞ்ஞான கற்கைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வைத்திய பரிசோதனைக்காக 2011 சனவரி 01 தொடக்கம் 2013 ஒக்தோபர் 15 வரை அறவிடப்பட்ட ரூபா 189,000 தொகைக்காக பெறுவனவுப் பற்றுச்சீட்டு வழங்கப்படாமல் நிதி மோசடி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வைத்திய பீடத்தின் க்வேட் ஆண்கள் வீதியில் ரூபா 47,077 பெறுமதியான 12 சமையல் எரிவாயு சிலிண்டர்கள், இரண்டு எரிவாயு அடுப்புக்கள் மற்றும் கேஸ் ரெகுலேட்டர்கள் என்பவற்றின் குறைவு அவதானிக்கப்பட்டன.

### 4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி மானியங்களின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற 18 செயற்திட்டங்களுக்காகக் கிடைத்திருந்த ரூபா 2,188,808 தொகை மீளாய்வாண்டின் போது உபயோகத்திற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) அமுல்படுத்தப்படாத செயற்திட்டம் (விவசாய/ வைத்திய/ விஞ்ஞான) 03 கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,150,485 சில வருடங்களாக செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அந்தப் பணத்தை உதவியாக வழங்கிய தரப்பினர்களுக்கு அனுப்புவதற்கோ அல்லது பல்கலைக்கழக வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது பல்வேறு செயற்திட்டங்களுக்காகக் கிடைத்த ரூபா 2,814,484 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை நானாவித வைப்புக் கணக்கில் காணப்பட்டது. இந்தப் பணத்தை எதிர்பார்த்த நோக்கங்களில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது வழங்கிய தரப்பினருக்கு அனுப்புவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் 09 செயற்திட்டங்களுக்கான ஆராய்ச்சி மானியத்தின் கீழ் கிடைத்த ரூபா 1,826,604 தொகை 1 வருடம் தொடக்கம் 4 வருடங்கள் வரையான காலப்பகுதியில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பல்கலைக்கழகத்தின் வெல்லமடம கட்டிடத்தொகுதியில் நானாவித கற்கைகளுக்காக ரூபா 2,620,140 பெறுமதியான 06 சேர்வர்களைக் (Server) கொள்வனவு செய்வதற்கு 2011 திசெம்பர் 13 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 08 வாரங்களுக்குள் உரிய பொருட்கள் வழங்கவேண்டிய போதிலும் அதற்கான தாமதத்திற்காக அறவிடவேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 262,017 தொகை அறவிடப்படாமல் முழுத்தொகையும் வழங்குனருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.7 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

முறையான கிரய மதிப்பீட்டின்றி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,456,000 தொகை செலுத்தி 1000 கொங்கிரீட் வடிகால் மூடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்தச் செயற்பாட்டிற்காக முதலாவது தடவை வரையறுக்கப்பட்ட கூறுவிலையின் பிரகாரம் 05 வருடங்கள் உத்தரவாதக் காலத்துடன் ஒரு கொங்கிரீட் மூடி ரூபா 1,428 தொகையில் (பெறுமதி சேர் வரித் தொகையுடன்) வழங்குவதற்கு இணங்கி ஒரு வழங்குனர் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்தார். இதற்காக இரண்டாவது தடவை கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன் பொறுப்புக்காலம் கோரப்பட்டிருக்கவில்லை. வழங்கப்படுகின்ற வடிகால் மூடிகளுக்காக கம்பிகளைக் கட்டுதலின் சரியான தன்மை மற்றும் கொங்கிரீட்களின் பலம் தொடர்பான ஆய்வுகூட அறிக்கையின்றி இந்தக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 4.8 பதவியணியினர் நிருவாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் கல்விசாரா பதவியணியினரில் 154 வெற்றிடங்களும், கல்விசார் பதவியணியினரில் 101 வெற்றிடங்களும் காணப்பட்டன.

### 4.9 ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாட்டிற்காக நிதியமொன்றைக் கட்டியெழுப்புதல்

ஊழியர் பணிக்கொடைக்காக நிதியேற்பாட்டை ஒதுக்குதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 356,357,000 ஆக இருந்ததுடன் இதற்கான நிதியம் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு தயாரிக்கும் போது கூட்டிணைந்த திட்டத்திற்கு ஏற்ப கவனம் செலுத்தி அதன் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு கவனம் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. மேலும் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் சில நிதிசார் தரவுகள் உள்ளடக்கப்படாமையினால் பாதீட்டை கூட்டிணைந்த திட்டத்துடன் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது வருமானம் மற்றும் செலவின மதிப்பீடுகளைச் செய்யும் போது சில வருமானம் மற்றும் செலவினங்கள் தர்க்கரீதியான அடிப்படையின்றி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன.

### 5.3 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் 2014 மே 01 ஆந் திகதி வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.4 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்பு

பல்கலைக்கழகத்திற்குரிய உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து வீட்டு வாடகையை அறவிடுவது தொடர்பாக 2009 திசெம்பர் 03 ஆந் திகதி தொடக்கம் 09 சந்தர்ப்பங்களின் போது கணக்காய்வு ஐயவினாவின் மூலம் கட்டுப்பாட்டு அதிகாரசபையில் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2012 ஒக்தோபர் 04 ஆந் திகதி நடைபெற்ற 73 ஆம் இலக்க போது பொதுமுயற்சிகள் தொடர்பான செயற்கூட்டத்தின் போது இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானத்திற்கு உடன்பட்டிருந்தது. இருந்த போதிலும் இந்த தீர்மானத்தை அமுல்படுத்துதல் 2014 மே 22 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வாகனக் கட்டுப்பாடு
(இ) உத்தியோகபூர்வ வீட்டு வாடகையினை அறவிடல்
(ஈ) முற்பணத்தைத் தீர்த்தல்
(உ) உடன்படிக்கையை முறித்த விரிவுரையாளர்களின்/ ஊழியர்களின் பணத்தை அறவிடுதல்
(ஊ) பொருட்பதிவேட்டுக் கட்டுப்பாடு